தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

21.01.2013 A.M

## தமிழகம் முழுவதும் அணைகள், ஏரிகள் சீரமைப்புக்கு ரூ.98 கோடி ஒதுக்கீடு: முதல்வர் ஜெயலலிதா உத்தரவு



தமிழகம் முழுவதும் புதிய தடுப்பணைகளைக் கட்டவும், ஏரிகளைச் சீரமைக்கவும் ரூ.98 கோடியில் பணிகளை மேற்கொள்ள முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

சென்னைக்கு அருகே கிருஷ்ணா நதிநீரைத் தேக்கி வைக்கும் வகையில் ரூ.35 கோடியில் புதிய தடுப்பணையைக் கட்டவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்தி:

தமிழகத்தில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், அனைத்து ஏரிகளிலும் அதிகமான நீரைத் தேக்கவும் ஏரிகளை தூர் வாருதல், கால்வாய்களை அகலப்படுத்துதல் உள்ளிட்டப் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மானாமதுரையில் ரூ.28 கோடியில் 2 படுகை அணைகள்: சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டத்தில் வைகை ஆற்றிலிருந்து மாநாடு ஏரி மற்றும் 9 ஏரிகளுக்கு நீர் வழங்க ரூ.12 கோடியே 85 லட்சம் செலவில் இலாடனேந்தல் கிராமத்தில் படுகை அணையைக் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

மானாமதுரை வட்டத்திலேயே வைகை ஆற்றிலிருந்து பார்த்திபனூர் பெரிய, சிறிய ஏரி, வன்னிக்குடி ஏரி மற்றும் இரண்டு ஏரிகளுக்கு நீர் வழங்க ஆத்தூர் கிராமத்தில் ரூ.16 கோடி செலவில் மற்றொரு படுகை அணை கட்டப்படும்.

திருச்சி ஸ்ரீரங்கம் எலமனூர் கிராமத்தில் மேலணையின் கீழ் உள்ள பாசன நிலங்களுக்கு நீரைத் திருப்பி விடுவதற்காக காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள மேலணையின் கதவுகளை சீராக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் ரூ.4 கோடியே 50 லட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

கிருஷ்ணா நதி நீரைச் சேமிக்க... சென்னையின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், ஆந்திரத்திலிருந்து வரும் கிருஷ்ணா நதி நீரைச் சேமிக்க திருவள்ளூர் மாவட்டம் திருக்கண்டலம் கிராமத்தின் அருகே கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே ரூ.35 கோடியில் தடுப்பணை கட்டப்பட உள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில்... தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பேய் குளம், பொட்டை குளம், கோரம்பள்ளம் ஆகிய ஏரிகளை ரூ.20 கோடி செலவில் மேம்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இவற்றோடு அரியலூர் மாவட்டத்தில் மருதையாற்றின் குறுக்கே அம்பலவார்கட்டளையிலிருந்து சுண்டக்குடி சாலை வரை ரூ.10 கோடியில் பாலம் கட்டுதல், வடசென்னை, எண்ணூர் அதிவிரைவு சாலையில் உள்ள சின்னக்குப்பத்தில் பழுதடைந்துள்ள கடலரிப்பு தடுப்புச் சுவர் ரூ.25 லட்சத்தில் சீரமைத்தல் போன்ற பணிகளுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம் ரூ.98 கோடியே 67 லட்சம் செலவில் மாநிலம் முழுவதும் இந்தப் பணிகளை மேற்கொள்ள முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகளால் விவசாயிகள் பயிரிடுவதற்கு தொடர்ந்து நீர் கிடைக்கும் என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

## தென்பெண்ணை ஆற்றில் அளவுக்கு மீறி மணல் எடுப்பு: கேள்விக்குறியாகும் நீர்மட்டம்,விவசாயம்



விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தென்பெண்ணை ஆற்றில் உள்ள அரசு குவாரிகளில், விதி மீறி அதிக ஆழத்தில் மணல் அள்ளப்படுவதால், பாசனக் கிணறுகளில் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. இதனால் விவசாயம் பாதிக்கும் அபாயம் நிலவுகிறது.

÷விழுப்புரம் மாவட்டத்தில் 4,80,000 ஹெக்டேரில் விவசாயம் நடைபெறுகிறது. இதில் 40 சதவீதம் நெல், கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றுக்கு திறந்தவெளி கிணறு, ஆழ் குழாய் கிணறு ஆகியவை மூலம் பாசனம் நடைபெறுகிறது. இந்த நீர்நிலைகளில் நீர்மட்டம் உயர முக்கிய ஆதாரமாக இருப்பது தென்பெண்ணையாறு.÷நடப்பாண்டில் பருவமழை பொய்த்ததால், தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் இல்லாமல் வறண்டு காட்சியளிக்கிறது. ஆற்றை சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் ஏற்கனவே சரிந்துள்ளது.

÷இந்நிலையில், தென்பெண்ணை ஆற்றில் அரசு 22 இடங்களில் மணல் குவாரிகளை அமைக்க அனுமதி வழங்கியுள்ளது. தற்போது விழுப்புரம் அருகே பிடாகம், கள்ளிப்பட்டு, பையூர், அந்தழி, மரகதபுரம், கரடிப்பாக்கம் ஆகிய 6 இடங்களில் அரசு குவாரிகள் அமைத்து மணல் அள்ளப்படுகின்றன. இங்கு அரசு விதிப்படி 3 அடி ஆழம் வரை தான் ஆற்றில் மணல் அள்ள வேண்டும். ஆனால், பொக்லைன் வைத்து 7 முதல் 10 அடி வரை மணல் அள்ளப்படுகிறது. இதனால், விழுப்புரம் பகுதியில் தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் ஓட்டம் இல்லாமல், ஆங்காங்கே குழிகளாக காணப்படுகின்றன.

÷பொதுப்பணித்துறை அதிகாரிகள் மணல் அள்ளுவதற்கு அனுமதி சீட்டு கொடுப்பதுடன் பணியை நிறுத்திக்கொள்கின்றனர். எவ்வளவு ஆழத்தில் மணல் எடுக்கப்படுகிறது என்பதையெல்லாம் கண்காணிப்பதில்லை.

÷குறிப்பாக விழுப்புரம் அருகே பிடாகம் தென்பெண்ணை ஆற்றில் 7 முதல் 10 அடி ஆழம் வரை பொக்லைன் மூலம் மணல் சூறையாடப்பட்டுள்ளது. ஆற்றில் மணல் அடுக்கு முடிந்தும் அதிக ஆழத்தில் அள்ளப்பட்டுள்ளதை அறிந்த அரசு, இதற்கு மேல் இங்கு மணல் அள்ளக்கூடாது என

நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளது. ÷குவாரிக்கு மாற்றாக கரடிப்பாக்கத்தில் மணல் அள்ள அனுமதி வழங்கியுள்ளபோதிலும் தொடர்ந்து பிடாகம் ஆற்றில் மணல் அள்ளப்பட்டு வருகிறது.

÷இதனால் சுற்றுப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் கிடுகிடு வென சரிந்து வருகிறது. மாவட்டத்தில் ஏற்கெனவே பருவமழை பொய்த்து நெல் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. இந்நிலையில், விதிமீறி மணல் அள்ளப்படுவதால் விவசாய கிணறுகளில் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படும் என விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

÷எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஆற்றில் மணல் அள்ளுவதை கண்காணித்து விதி மீறலை தடுக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## உறைபனி: கருகும் தேயிலைச் செடிகள்

மஞ்சூர் பகுதியில் கடந்த சில தினங்களாக பொழியும் உறைபனியால் தேயிலைச் செடிகள் கருகி வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிரதானமாக உள்ளது. மாவட்டத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக குந்தா பகுதியில் அதிக அளவு தேயிலை விவசாயிகள் உள்ளனர்.

10 ஆண்டுகளுக்கும் மேலாக தேயிலைக்கு உரிய விலை கிடைக்காத நிலை இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த சில மாதங்களாக தேயிலைச் சந்தையில் விற்பனை அதிகரித்திருப்பதால், பசுந்தேயிலை விலை படிப்படியாக உயர்ந்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்திருந்தனர்.

இந்நிலையில் மஞ்சூர், பிக்கட்டி, எடக்காடு, இத்தலார், கிண்ணக்கொரை உள்ளிட்ட பகுதிகளில் உறைபனி தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் தேயிலைச் செடிகள் கருகி பசுந்தேயிலை மகசூல் மிகவும் குறைந்துள்ளது. இதன் காரணமாக கூட்டுறவுத் தேயிலை ஆலைகளில் தேயிலை வரத்து பாதியாக குறைந்துள்ளது.

நடப்பாண்டில் குறிப்பிட்ட அளவு பருவமழை பெய்யாததால், தேயிலைச் செடிகள் காய்ந்திருந்தன.

தற்போது உறைபனி தாக்கத்தால் தேயிலைச் செடிகள் கருகி வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## வறட்சியில் கருகும் மானாவாரிப் பயிர்கள்: நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை

தேனி மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால் மானாவாரி நிலங்களில் வறட்சியால் கருகிவரும் பயறு வகை பயிர்களுக்கு நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்தில் மானாவாரி விவசாய நிலங்களில் 4,150 ஹெக்டேர் பரப்பளவில் சோளம், 1,470 ஹெக்டேரில் மக்காச்சோளம், 4,600 ஹெக்டேரில் துவரை, பாசிப்பயறு, உளுந்து, 1,780 ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

ஆடிப் பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட மொத்தம் 12 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிலான பயறு வகை மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள், பருவமழை பொய்த்ததால், தற்போது கருகிய நிலையில் உள்ளன. கடும் வறட்சி மற்றும் கூடுதல் பனிப் பொழிவால், சில நாள்களில் அறுவடை பருவத்தை எதிர் நோக்கியுள்ள மானவாரி பயிர்களில், 80 சதவிகிதம் மகசூல் இழப்பு ஏற்படும் என விவசாயிகள் கூறுகின்றனர்.

காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்கள் அதிகரிப்பால் மானாவாரி சாகுபடி பரப்பளவு குறைந்துவரும் நிலையில், வறட்சியால் மானாவாரி விவசாயம் பாதித்துள்ளதால் இந்த ஆண்டு மாவட்டத்தில் பயறு வகை பயிர், எண்ணைய் வித்துப் பயிர் உள்ளிட்ட உணவு தானிய உற்பத்தி குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நிலவிவரும் வறட்சியால் மானாவாரி பயிர் சாகுபடியில் ஏற்பட்டுள்ள இழப்பீட்டைக் கணக்கிட்டு, அரசிடம் இருந்து விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் பெற்றுத் தர, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஜன.24 இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜன. 24 ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்களது கோரிக்கைகள்

குறித்து மனு அளித்து தீர்வு காணலாம் என்று ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செ.முத்தையா தெரிவித்தார்.

## மழை பொய்த்ததால் 2 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர் கருகும் அபாயம்

போடி பகுதியில் மழை பொய்த்ததால் இரண்டாயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் கருகி வருகின்றன.

போடி- வடக்குமலை, பகுதியில் உள்ள ஊத்தாம்பாறை, மேலப்பரவு, பாட்டக்களம், வேளாங்காடு, நடுக்கிணறு, சிவியர்துறை, அம்மாகுளம், மரிமூர் ஆகிய ஊர்களில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

இந்தப் புலங்களுக்கு ஊத்தாம்பாறை ஆற்றிலிருந்து பாசனம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், மழையை நம்பியே விவசாயம் நடந்து வருகிறது. இதனிடையே கடந்த சில மாதங்களாகவே, போடி பகுதியில் போதிய மழை இல்லை. இதனால், கொட்டகுடி உள்ளிட்ட ஆறுகளில் தண்ணீர் வரத்து குறைந்துவிட்டது.

இதனால், மழை மற்றும் ஆற்றுநீரை நம்பி விவசாயம் செய்துள்ள நிலையில் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் பயிர்கள் காய்ந்து வருகின்றன. தண்ணீர் பாய்ச்சி 20 நாள்களுக்கும் மேலாகி விட்டதால், நிலங்களில் விரிசல் விழுந்து காய்ந்து போயுள்ளது.

இதுகுறித்து, விவசாயி நாகராஜ் கூறியது: எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு, இந்த ஆண்டு போடி பகுதியில் வறட்சி நிலவுகிறது. ஆறுகளில் தண்ணீர் இல்லாமல் காய்ந்து போயுள்ளது. இதனால், ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் வரை செலவு செய்தும் தற்போது நெற்பயிர் வளராமல் காய்ந்து வருகிறது. அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றார்.

இதுகுறித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்க தாலுகா தலைவர் மூக்கையா கூறியது: போடி பகுதியில் மழை இல்லாததால் 2 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் நாசமடைந்துள்ளன. இதுகுறித்து, மாவட்ட நிர்வாகத்துக்கு உரிய தகவல் அளித்துள்ளோம். இப்பகுதியை வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில், திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம் என்றார்.

## காரைக்காலில் நெல் கொள்முதல்: அரசின் நிலையை விளக்க வலியுறுத்தல்

காரைக்கால் மாவட்டத்தில் நெல் கொள்முதல் நடவடிக்கை தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை விரைந்து விளக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காரைக்கால் மைய கூட்டுறவு விநியோக சங்கம் (மார்கெட்டிங் சொசைட்டி) முன்னாள் தலைவர் எஸ். ஆசைத்தம்பி சனிக்கிழமை கூறியது :

காரைக்கால் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக மத்திய உணவுக் கழகம் நெல் கொள்முதல் செய்வதில்லை. மார்கெட்டிங் சொசைட்டி மட்டுமே நெல் கொள்முதல் செய்து வருகிறது.

நிகழாண்டு நெல் கொள்முதல் செய்ய அரசின் நிதியுதவி கோரப்பட்டது. இதற்காக ரூ. 2 கோடி வழங்கப்படும் என பேரவையில் அரசு அறிவித்தது.

ஆனால், இதுவரை நிதி வழங்கப்படவில்லை. புதுச்சேரி கூட்டுறவு வங்கியில் கடன் கேட்டபோது, நிலுவையை காரணம் காட்டி, கடன் வழங்க மறுக்கப்பட்டது. மார்கெட்டிங் சொசைட்டிக்கு தர வேண்டிய நிதியை பல்வேறு துறையினரும் தராததால் தான் இந்த நிலுவை ஏற்பட்டது. கூட்டுறவு நிறுவனம் மூலம் நெல் கொள்முதல் செய்தால் மட்டுமே விவசாயிகளுக்கு பயன் கிடைக்கும்.

நெல் கொள்முதல் செய்ய சங்கத்துக்கு தேவையான நிதி அளிப்பதில் அரசின் செயல்பாட்டில் திருப்தி இல்லை. நெல் கொள்முதல் செய்வதில் புதுவை அரசின் நிலைப்பாட்டை விரைந்து விளக்க வேண்டும்.

விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, புதுவை முதல்வர் ரங்கசாமி, வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு ஆகியோர் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

## 70 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் முடக்கம்: அமைச்சரிடம் புகார்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 70 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்படாமல் முடங்கியுள்ளதாக, சனிக்கிழமை ஆய்வுக்கு வந்த பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் மூர்த்தியிடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தை அடுத்த பாலுசெட்டிசத்திரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. இக்குளிரூட்டும் நிலையத்தை பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் மூர்த்தி சனிக்கிழமை ஆய்வு செய்தார்.

அப்போது குளிரூட்டும் நிலையம் குறித்த தகவல்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அப்போது பால் உற்பத்தியாளர் பணியாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் ஜி. பொம்மகிரி, அமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்தார்.

மனு குறித்து அமைச்சரிடம் அவர் கூறியது: காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் தலைமையிடமான கூட்டுறவு ஒன்றியம் சென்னை அயனாவரத்தில் செயல்பட்டு வருகிறது. ஆனால் காஞ்சிபுரத்தில் 42, ஸ்ரீபெரும்புதூரில் 13, உத்தரமேரூரில் 54, செங்கல்பட்டில் 54, மதுராந்தகத்தில் 55, அச்சிறுப்பாக்கத்தில் 53 சங்கள் என 271 சங்கங்களில் இருந்துதான் இந்த ஒன்றியம் 53 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்கிறது.

இந்த கூட்டுறவு ஒன்றியத்தின் ஒரு நாள் பால் கொள்முதல் 62 ஆயிரம் லிட்டர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மாவட்டத்தில் பாலுச்செட்டிச் சத்திரம், சாணூர், உத்தரமேரூர், பெருநகர், திருக்கழுக்குன்றம், எலப்பாக்கம், பெரும்பாக்கம் ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாறு இந்த ஒன்றியம் சார்ந்த அனைத்து சங்கங்கள், பால் குளிரூட்டும் நிலையங்கள் என அனைத்தும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கும்போது அதன் தலைமை அலுவலகமான கூட்டுறவு ஒன்றியம் மட்டும் சென்னையில் செயல்படுகிறது.

தலைமையிடம் சென்னையில் செயல்படுவதால் 271 சங்கங்களில் 70 சங்கங்கள் செயல்படாமல் முடங்கிக் கிடக்கின்றன. மேலும் பால் உற்பத்தியாளர்களின் சிறிய பிரச்னைக் கூட சென்னைக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் தனியார் பால் உற்பத்தி அதிகரிக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மாதவரம் மூர்த்தி தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் வி. சோமசுந்தரம், வாலாஜாபாத் பா. கணேசன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் காஞ்சி பன்னீர்செல்வம், காஞ்சிபுரம் ஒன்றியக்குழுத் தலைவர் ஜீவானந்தம், குளிரூட்டும் நிலைய மேலாளர் சிவக்குமரன், ஆர்.டி.ஓ. சக்திமணி, தாசில்தார் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## கடனைச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில் 3 சதவீதம் மானியம்

கடனைத் திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில் 3 சதவீதம் மானியம் வழங்கப்படும் என்று இந்தியன் வங்கி காஞ்சிபுரம் மண்டல மேலாளர் டி. வாசுதேவன் தெரிவித்தார்.

கால்நடை பண்ணை அமைக்க வங்கிக் கடன் வழங்குவது குறித்து விவசாயிகளுக்கான இலவச விழிப்புணர்வு கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை காஞ்சிபுரம் உழவர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

அந்நிலையத்தின் தலைவர் கன. வெங்கட சுதாகர் ராவ் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்தியன் வங்கி காஞ்சிபுரம் மண்டல மேலாளர் டி. வாசுதேவன் பேசியது:

விவசாயிகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அதிக அளவில் கடன் வழங்கி வருகின்றன. ரூ.1 லட்சம் வரையிலான விவசாயக் கடன்களுக்கு எந்தவித பிணையும் தேவையில்லை. விவசாயி விளைவிக்கும் பயிர்களுக்கன பற்றுரிமை மட்டும் வங்கிகளுக்கு உண்டு.

அதற்கு மேல் கடன் வாங்கும் விவசாயிகள் வங்கிகள் கேட்கும் பிணைகளை கொடுக்க வேண்டும். விவசாயக் கடனுக்கான வட்டி வெறும் 7 சதவீதம் மட்டுமே. கடனை முறையாக திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில் 3 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் விவசாயிகளுக்கு மறுசீரமைப்பு விவசாயக் கடன் அட்டை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி 5 ஆண்டுகளுக்கு தொடர்ந்து வங்கிக் கடன் வழங்கும். அது அந்தந்த ஆண்டு விலை உயர்வுக்கு தகுந்தார்போல 10 சதவீதம் வரை கடன் தொகை அதிகரிக்கப்படும்.

இந்த மறுசீரமைப்பு விவசாயக் கடன் அட்டைக்கு ஏ.டி.எம். அட்டை வழங்கப்படுகிறது. இந்த விவசாயக் கடன் அட்டை திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு ரூ.1 லட்சம் கடன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், அத்தொகையில் விவசாயி ரூ.50 ஆயிரம் மட்டுமே எடுத்திருந்தால் விவசாயி எடுத்தத் தொகைக்கு மட்டுமே வட்டிக் கணக்கிடப்படும்.

கறவை மாடு வாங்க கடன்: கறவை மாடுகள் வாங்க வங்கிக் கடனை நாடும் விவசாயிகள் அந்த பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக இருக்க வேண்டும். அந்த சங்கங்களுக்கு பால் கொள்முதல் செய்பவராக இருக்க வேண்டும்.

தனியாருக்கு பால் கொடுப்பவராக இருந்தால் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கொடுப்பதற்கான சான்றுகள் வைத்திருக்க வேண்டும். 2 கறவை மாடுகள் வரை கடன் வழங்கப்படும்.

முதல் மாடு வாங்கிய 6 மாதத்துக்கு பிறகு அடுத்த மாட்டுக்கு கடன் வழங்கப்படும். கறவை மாட்டை வாங்கிய விவசாயிகள் அப்பகுதியில் உள்ள கால்நடை மருத்துவரிடம் உரிய சான்றுகளைப் பெற்று அதை சமர்ப்பிக்க வேண்டும்.

5 மாடுகளுக்கு மேல் கடன் வாங்க விரும்பும் விவசாயிகளுக்கு சொந்தமாக 50 சென்ட் வரை நிலம் இருக்க வேண்டும். அந்த நிலத்தில் சொந்தமாக பச்சைத் தீவனம் பயிர் செய்ய வேண்டும். பச்சை தீவனம்தான் பால் உற்பத்தியை அதிகரிக்கும். எனவே இது போன்ற வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றார் வாசுதேவன்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் சுற்றுப்பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## புயலால் பாதித்த விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள் விநியோகம்

குமராட்சி, கீரப்பாளையம், காட்டுமன்னார்கோவில், பரங்கிப்பேட்டை, புவனகிரி ஆகிய பகுதிகளைச் சார்ந்த தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்களின் சான்றுப் பெற்ற உளுந்து சிறுதளை இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது.

அதற்குத் தேவையான இருப்பு வைக்கப்பட்டிருப்பதாக கடலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அதன்படி விதைப்பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் அதிரடி பயறு வகை பெருக்குத் திட்டத்துக்காக அஈப3, அஈப5 உளுந்து மற்றும் இர்6 பச்சைப்பயறு ரக விதைகளை ரூ.20 மானியத்தில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்க அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் புரோனபெனோபாஸ் பயிர் பாதுகாப்பு மருந்துகளும் 50 சதவீத மானியத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்கு அருகிலுள்ள வேளாண் விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொண்டு பயனடையுமாறு இணை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மானிய விலையில் உளுந்து விதைகள்

சிதம்பரம், பரங்கிபேட்டை வட்டாரத்தில் உளுந்து, பச்சைப்பயிர் மற்றும் எள் விதைகள் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பத்திரிகை செய்தி: உளுந்து பயிரில் அஈப-3, அஈப-5, வம்பன்-3 ஆகிய ரகங்களில் சான்றுநிலை விதைகளும், பச்சைப்பயிரில் கோ-6 என்ற ரகத்தில் ஆதாரநிலை விதைகளும், எள் பயிரில் பஙய-3 என்ற ரகத்தில் சான்றுநிலை விதைகளும் 50 சதவீத மானிய விலையில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சிதம்பரம், பின்னத்தூர் மற்றும் பரங்கிப்பேட்டை வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் மேற்கண்ட விதைகளை விவசாயிகள் பெற்று பயனடையலாம். மேலும் உளுந்து பயிரிடும் விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தயாரிப்பாகிய பயிறுவகை (ஒண்டர்) என்ற நுண்ணுரம், சிங்சல்பேட் என்ற நுண்ணுரம், ஜிப்சம், அசார்டிரக்டின் என்ற தாவர பூச்சிக்கொல்லி ஆகியவையும் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது என வேளாண் உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ் தெரிவித்துள்ளார்.போலீஸாரை கண்டித்து மறியல்:

## "வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தவே விலையில்லா ஆடு, மாடுகள்

தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழகத்தில் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் விவசாயிகளுக்கு விலையில்லா ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தை அறிவித்து அதை செயல்படுத்தி வருகிறார் என கடலூர் மருதாடு கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த விழாவில் சுற்றுச்சுழல் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் பேசினார்.

மருதாடு ஊராட்சியில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் கால்நடை மற்றும் மீன்வள வாரவிழா நடைபெற்றது. இவ்விழாவில் விவசாயிகளுக்கு விலையில்லா நாட்டுக் கோழிக்குஞ்சுகள் வழங்கும் திட்டத்தை அமைச்சர் எம்.சி.சம்பத் தொடங்கி வைத்து பேசியது:

கடலூர் மாவட்டத்தில் இதுவரை 9 ஆயிரத்து 370 பயனாளிகளுக்கு 37 ஆயிரத்து 680 விலையில்லா ஆடுகளும், 1749 பேருக்கு விலையில்லா கறவை மாடுகளும் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

விழாவுக்கு, தலைமை வகித்த மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் பேசியது: இவ்விழாவின் மூலம் ரூ.2 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 250 நபர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரித்தல் தொடர்பாக கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் கூறும் ஆலோசனைகளின் பேரில் செயல்பட்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்வதாக ஆட்சியர் கூறினார்.

இவ்விழாவில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் துணைவேந்தர் ரா.பிரபாகரன் மற்றும் கடலூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மணிமேகலை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

21.01.2013 A.M

---

## காய்கறி விலை சரிவு விற்பனை அதிகரிப்பு

தேனி: தேனி உழவர்சந்தையில் நேற்று காய்கறி விலைகள் குறைவாக இருந்ததால் விற்பனை அதிகமாக இருந்தது. தேனி உழவர்சந்தைக்கு நேற்று 75 விவசாயிகள் 66 வகையான 37 டன் எடையுள்ள காய்கறிகளை கொண்டு வந்திருந்தனர். இவற்றின் விலைகள் குறைவாக இருந்ததால், சந்தைக்கு வந்த பொதுமக்கள் அதிகளவு காய்கறிகளை வாங்கிச் சென்றனர்.

காய்கறி விலை நிலவரம், கிலோவிற்கு ரூபாயில்: கத்தரி- 16, தக்காளி- 10, வெண்டைக்காய்- 18, அவரைக்காய்- 15, கொத்தவரை- 18, சுரைக்காய்- 7, புடலங்காய்- 13, பாகற்காய்- 20, பீர்க்கு- 16, முருங்கைக்காய்- 25, பூசணி- 8, உருட்டு பச்சை மிளகாய்- 24, சம்பா மிளகாய்- 28, குடமிளகாய்- 40, தேங்காய்- 8, பீட்ரூட்- 13, நூக்கல்- 12, முள்ளங்கி- 10, முருங்கை பீன்ஸ்- 24, பட்டர்பீன்ஸ்- 60, முட்டைக்கோஸ்- 10, காரட்- 18, டர்னிப்- 15, சவ்சவ்- 15, காலிபிளவர்- 7, பச்சைபட்டாணி- 38, இஞ்சி- 48, பூடு- 40, உருளைக்கிழங்கு- 25, கருணைக்கிழங்கு- 18, சேனைக்கிழங்கு- 20,

வெற்றிலை- 26, மாங்காய்- 30, மொச்சக்காய்- 32, கோவங்காய்- 20, தட்டாங்காய்- 32, கருவேப்பிலை- 36, மல்லி- 40, புதினா- 25, சின்ன வெங்காயம்- 40, பெல்லாரி- 24, அரைக்கீரை-18, இதர கீரைகள்-5.

## தேங்காய் விளைச்சல் குறைவு: விவசாயிகள் கலக்கம்

போடி: கொப்பறை மார்க்கெட்டில் தேங்காய் விலை உயர்ந்தும், விளைச்சல் இல்லாததினால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் போடி, செங்குளம், ஊத்தாம்பாறை, முந்தல், குரங்கணி, கொட்டகுடி, அணைக்கரைப்பட்டி, கடமலைக்குண்டு, வருசநாடு, கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் தென்னந்தோப்பு அதிகமாக உள்ளது. இங்கிருந்து மதுரை, திண்டுக்கல், திருச்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு இளநீர் அனுப்பப்படுகிறது. இளநீரில் நக்கல்வாரி, செவ்விளநீர் வகைகள் உள்ளன. இவை 30 நாட்களுக்கு ஒரு முறை வெட்டி இறக்கப்படுகின்றன. தற்போது பனி காலம் துவங்கியுள்ள நிலையில் இளநீர் விற்பனையில் மந்தம் ஏற்பட்டுள்ளது. தேங்காயை பொறுத்தவரை 45 நாட்களுக்கு ஒரு முறை காய் வெட்டப்படுகிறது. விளைந்த மரங்களில் ஒரு வெட்டுக்கு 35 காய்கள் கிடைக்கும். கடந்த ஆண்டு பெரிய காய் 6 ரூபாய்க்கும், சிறிய காய் 4 ரூபாய்க்கும் கொள்முதல் செய்தனர். சில்லரையில் இளநீர் 15 ரூபாய் வரை விற்பனையானது. இதனால் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்து வந்தனர். மேலும் கடந்த ஆண்டு கொப்பறை தேங்காய் மார்க்கெட்டில் கிலோ 56 ரூபாய் வரை விலை போனது. இதனால் வெளி மார்க்கெட்டில் தேங்காய் விலையும் அதிகரித்திருந்தது. கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு ஈரோடு, காங்கேயம், வெள்ளக்கோயில், திருச்சி ஆகிய ஊர்களில் கொப்பறை தேங்காய் கிலோ 56 லிருந்து 36 ரூபாய் ஆக குறைந்திருந்ததால்,தேங்காய் விலை சரிவு ஏற்பட்டு 3.50 முதல் 3.70 ரூபாய் வரை விலை போனது. தற்போது வெயில் தாக்கம், மழை இல்லாததினால் விளைச்சல் குறைந்துள்ளது. கொப்பறை மார்க்கெட்டில் 16 ரூபாய் அதிகரித்த நிலையில் கிலோ 55 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. தற்போது தேங்காய் 6 ரூபாய் வரை விவசாயிகளிடம் வியாபாரிகள் கொள்முதல் செய்து, வெளி மார்க்கெட்டில் 12 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். கொப்பறை மார்க்கெட்டில் தேங்காய்க்கு நல்ல விலை இருந்தும், விளைச்சல் இல்லாததினால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தென்னை விவசாயி வேலு கூறுகையில்,"" கொப்பரை மார்க்கெட்டில் கடந்த 4 மாதங்களுக்கு முன்பை காட்டிலும் 16 ரூபாய் அதிகரித்துள்ளது. தற்போது மழை இல்லாதது, வெயில் அதிகரிப்பு காரணமாக தேங்காய் விளைச்சல் குறைந்துள்ளது. தேங்காயை

பொறுத்தவரை நல்ல விலை இருந்தும் விளைச்சல் இல்லாததினால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்," என்றார்.

## காரைக்குடியில் காய்கறிகள் விலை இஷ்டத்திற்கு உயர்வு

காரைக்குடி: காரைக்குடியில்,வீதிக்கு வீதி காய்கறிகளின் விலைகள் வேறுபடுவதால், அதை வாங்குபவர்கள் பாடு திண்டாட்டமாகிறது. காரைக்குடியில், திங்கள், வியாழன், சனியன்று மூன்று நாட்கள் வாரசந்தைகள் நடக்கின்றன. இது தவிர, தினசரி மார்க்கெட், உழவர் சந்தையும் உள்ளன. மதுரை, ஒட்டன்சத்திரம் மார்கெட்டில் இருந்து, கொள்முதல் செய்து, இங்கு விற்கின்றனர். காரைக்குடிக்கு ஒரு (50 கிலோ)மூடைக்கு, லாரி வாடகை ரூ.85 வசூலிக்கின்றனர். இதனால், கிலோவிற்கு ரூ.5 கூடுதலாக வைத்தாலும் பரவாயில்லை. ஆனால், இங்கு, காய்கறிகளின் விலை நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. ஒட்டன்சத்திரத்தில், தக்காளி கிலோ ஒரு ரூபாய்க்கு விற்றாலும், காரைக்குடியில், ரூ.15க்கு விற்கின்றனர். மதுரை மார்க்கெட்டில் வெங்காயம் கிலோ ரூ.10 தான். ஆனால், இங்கு, ரூ.40க்கு விற்கின்றனர். வாரச்சந்தைகளில், காலை, மாலையில் மாறுபட்ட விலையில் காய்கறிகளை விற்கின்றனர். தினசரி சந்தையில், அன்றாடம் விற்கும் காய்கறிகளின் விலைப்பட்டியல் வைப்பதில்லை. விலை பட்டியலின்றி, ஒவ்வொரு வியாபாரியும் தங்கள் இஷ்டத்திற்கு காய்கறிகளை விற்கின்றனர். அதே போன்று மீன், இறைச்சிகளும் விற்கப்படுகின்றன. பர்மா காலனி சேர்ந்த செல்வன் கூறியதாவது: அரசு ஊழியர் மட்டுமன்றி, அன்றாடம் காய்ச்சிகளும் உள்ளனர் என்பதை மறந்து, வியாபாரிகள் காய்கறிகள் விற்கின்றனர். மதுரை மார்க்கெட்டில் உள்ள விலையை ஒப்பிடுகையில், காரைக்குடியில் நான்கு மடங்கு உயர்ந்துள்ளன. வியாபாரிகள் மக்களின் கஷ்டத்தை உணர்வதில்லை. வாடகை வாங்கும் நகராட்சி, விலை பட்டியல் வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை. காரைக்குடியில், காய்கறி விலை, ஏழைகளுக்கு எட்டாக்கனியாகிவருகிறது, என்றார். காரைக்குடியில், சீரான விலையில் காய்கறிகள் விற்பனை செய்ய தேவையான நடவடிக்கைகளை விவசாய விற்பனை நிலையம் எடுக்கவேண்டும்.

## வேளாண் அலுவலர்களுக்கு பயிற்சி

சிவகாசி: நீர்வள நிலவள திட்டத்தின் கீழ், வல்லம்பட்டி உபவடிநில பகுதியான வெம்பக்கோட்டை, ஆலங்குளத்தில், விரிவாக்க அலுவலர்களுக்கான மாற்று மேலாண்மை

மேம்பாட்டு பயிற்சி முகாம் நடந்தது. வெம்பக்கோட்டை உதவி இயக்குனர் வனஜா தலைமை வகித்தார். சென்னை திறன் வளர்ப்புக்கான மேலாண்மை பயிற்சி மைய பயிற்றுனர்கள் நடராஜன், சுதர்சன், நீரின் முக்கியத்துவம் பற்றி பயிற்சி அளித்தனர். தோட்டக்கலை, வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை, மீன்வளத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வெம்பக்கோட்டை வேளாண்மை அலுவலர் ராமசாமி, துணை வேளாண் அலுவலர் குருபாண்டியன் செய்திருந்தனர்.

## கொப்பரை தேங்காய் ரூ.68 லட்சத்துக்கு ஏலம்

பெருந்துறை: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 68 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை தேங்காய்கள் ஏலம் விடப்பட்டது.

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது.

பெருந்துறை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து, விவசாயிகள், இரண்டாயிரத்து, 929 மூட்டைகளில், ஒரு லட்சத்து, 45 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காயை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ, 46.55 முதல், 56.30 ரூபாய் வரை ஏலம் போனது.

இரண்டாம் தரம் கொப்பரை தேங்காய், 37.75 முதல் 45.65 ரூபாய் வரை ஏலம் போனது.

இந்த விலை, கடந்த வார விலையை விட கிலோவுக்கு ஒரு ரூபாய் குறைவாகும். மொத்தம், 68 லட்சம் ரூபாய்க்கு, கொப்பரை தேங்காய் விற்பனையானது.

## வறட்சியின் பிடியில் தேயிலை பாதுகாப்பு பணியில் விவசாயிகள்

பந்தலூர் : பந்தலூர் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை தோட்டங்களை காப்பாற்ற "ஸ்பிரிங்லர்' மூலம் தண்ணீர் பாய்ச்சுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.பந்தலூர் சுற்றுவட்டார பகுதிகளில் டான்டீ மற்றும் தனியார் தேயிலை தோட்ட நிறுவனங்களை தவிர ஏராளமான சிறு தேயிலை விவசாயிகளும் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். தற்போது, கடுமையான பனிப்பொழிவும், பகல் நேரங்களில் வெப்பமான காலநிலையும் நிலவி வருகிறது. இதனால் தேயிலை செடிகள் காய்ந்து கருக துவங்கியுள்ளது. தேயிலை செடிகளை பாதுகாக்கும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். காலை மற்றும் மாலை நேரங்களில் "ஸ்பிரிங்லர்' மூலம் தண்ணீர் பாய்ச்சும் செயல் அதிகரித்துள்ளது. இதற்காக தோட்டக்கலைத்துறை மூலம் மானிய விலையில் ஸ்பிரிங்லர் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது.

## பயிர்களுக்கு காப்பீடு விவசாயிகளுக்கு வாய்ப்பு

காஞ்சிபுரம்:"காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், பயிர் பாதுகாப்பிற்காக, பயிர் காப்பீடு செய்து கொள்ள வேண்டியது அவசியம்' என, வேளாண்மை இணை இயக்குனர் சீதாராமன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

காஞ்சிபுரம் மாவட்டத்தில், விவசாயிகள் பயிரிடும் பயிர்களுக்கு, வேளாண்மைத் துறை சார்பில், பயிர் பாதுகாப்பு காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நெல், நிலக்கடலை, எள், கரும்பு பயிரிடும் விவசாயிகள், தாங்கள் பயிர் செய்துள்ள நிலங்களின் பரப்பளவிற்கு ஏற்றவாறு, பயிர் பாதுகாப்பு காப்பீடு செய்து கொள்ளலாம்.

இதற்காக, விவசாயிகள் நிலத்தின் அடங்கல், நிலத்தில் பயிரிட்டுள்ள பயிர் வகையை, வேளாண்மை விரிவாக்க மையங்களில் பதிவு செய்ய வேண்டும். இதற்காக காப்பீட்டுத் தொகையில், 50 சதவீதத்தை வேளாண்மைத் துறை ஏற்றுக் கொள்கிறது. மீதமுள்ள 50 சதவீதம் காப்பீட்டுத் தொகையை, விவசாயிகள் செலுத்த வேண்டும்.

இக்காப்பீட்டில் பூச்சிநோய் தாக்கம், வறட்சி, வெள்ளம், இயற்கை தீ உள்ளிட்ட பல்வேறு இடர்பாடுகளில் ஏற்படும் இழப்புகள் பதிவு செய்யப்பட்டு, உரிய நிவரணம் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.சாய கழிவுநீர் கலப்பதால் விஷமாகும் வேகவதி ஆறு

காஞ்சிபுரம்:

ஐயம்பேட்டை - பெண்டை இடையே, வேகவதி ஆற்றில், தனியார் சாயப்பட்டறை கழிநீர் கலப்பதால், ஆற்றின் நீர் படுகை மாசடைந்து வருகிறது.

வேகவதி ஆற்றில், ஐயம்பேட்டை, பெண்டை பகுதியில், மணல் திருட்டு அதிக அளவில் நடக்கிறது. மணல் எடுப்பதால் ஏற்பட்டுள்ள பள்ளங்களில், பெரியார் நகர், முத்தியால்பேட்டை, ஐயம்பேட்டை, நாயக்கன்பேட்டை மற்றும் சுற்றியுள்ளப் பகுதிகளில் உள்ள, தனியார் சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேறும் சாயக் கழிவுநீர் தேங்கி
நிற்கிறது.

நிலத்தடி நீர் மாசு

இதனால், வேகவதி ஆற்றின் நீர் படுகையும், கரையோரம் நிலத்தடி நீரும் மாசடைந்து வருகிறது. சமீப காலமாக, கரையோர பகுதிகளில் எடுக்கப்படும் குடிநீர், உவர்ப்பாக மாறி விட்டது. இதே நிலை நீடித்தால், வேகவதி ஆறும், கரையோரங்களும் முற்றிலும் மாசுபடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே, ஆற்றில் சாயக்கழிவு நீர் கலப்பதை தடுத்து நிறுத்த வேண்டும், என

அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விதி மீறல்

இது குறித்து ஊராட்சி தலைவர்

ஒருவர் கூறியதாவது:

சாயப்பட்டறைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை, சுத்திகரிக்க நிறைய செலவாகும் என்பதால், சாயப்பட்டறை உரிமையாளர்கள், சுத்திகரிக்காமல் வெளியேற்றுகின்றனர். இதனால் ஆற்றின் நிலத்தடி நீர் மாசடைவதுடன், உவர்ப்பாகவும் மாறி வருகிறது. வேகவதி ஆற்றுக்கு கழிவுநீர் கொண்டு வரும் கால்வாய்களை உடனடியாக மூடவேண்டும், என மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுக்க உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் ஜோசதீன் சகாயம் கூறுகையில், ""ஐயம்பேட்டை, முத்தியால்பேட்டை பகுதியில், சாயப்பட்டறை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் விரைவில் ஆய்வு செய்யப்படும்," என்றார்.

## "தினமலர்' செய்தி எதிரொலி திசு வாழை திட்டத்தை விவசாயிகள் பார்க்க திட்டம்

காஞ்சிபுரம்:"தினமலர்' நாளிதழில் வெளியான செய்தியை தொடர்ந்து, திசு வாழை வளர்ப்பு திட்டத்தை, விவசாயிகள் பார்வையிட, மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்து வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு கூட்டம், காஞ்சிபுரத்தில் கடந்த 18ம் தேதி நடந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் சித்ரசேனன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் அவர் பேசியதாவது:

சமீப காலமாக, தினமலர் நாளிதழில், காஞ்சிபுரம் மாவட்டத்தை பற்றி செய்திகள், குறிப்பாக விவசாய செய்திகள் ஏராளமாக வருகின்றன.

சமீபத்தில், சித்தாமூர், லத்தூர் ஒன்றியங்களில், விவசாயிகள், திசு வாழை வளர்ப்பு குறித்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இதுபோன்ற மாற்று பயிர்களைப் பயிரிட விவசாயிகள் முன் வர வேண்டும்.

திசு வாழை வளர்ப்பு குறித்து, நேரில் அறிய விரும்பும் விவசாயிகளை, மாவட்ட நிர்வாகத்தின் செலவில், அழைத்து செல்ல தயாராக உள்ளோம்.

விருப்பம் உள்ள விவசாயிகள் பெயர் கொடுங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த அறிவிப்பை அடுத்து, பெரும்பாலான விவசாயிகள் தங்கள் பெயரை ஆர்வத்துடன் தெரிவித்தனர்.

அவர்களின் பெயரை குறித்துக் கொள்ளும்படி கூறிய, மாவட்ட ஆட்சித் தலைவர், "திசு வாழை வளர்ப்பை பார்வையிட செல்லும் தேதி, விரைவில் அறிவிக்கப்படும்' என்றார்.

## குண்டுமல்லி நடவு செய்ய புது "டெக்னிக்' பனமரத்துப்பட்டி விவசாயிகள் முயற்சி

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதியில், களிமண் மற்றும் களர் மண் உள்ள வயலில், ஒரு அடி ஆழம் மற்றும் அகலத்துக்கு செம்மண் கொட்டி, அதில் குண்டுமல்லி செடி நடவு செய்யும் யுக்தியை, விவசாயிகள் கடைபிடித்து வருகின்றனர்.

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி பகுதியில், அரளி, குண்டுமல்லி, ரோஜா, சம்பங்கி உள்ளிட்ட பூக்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. பூச்செடிகளை பொறுத்த வரை, செம்மண் மற்றும் மணல் தாரை, கரிசல் மண் ஆகிய மண்ணில், நன்றாக வளரும் தன்மை கொண்டது. அரளி, குண்டுமல்லி ஆகிய பூச்செடிகள், பத்து ஆண்டுகளுக்கு பலன் தரக்கூடியது.

பனமரத்துப்பட்டி பகுதியில், பல இடங்களில், பூ செடிகள் நடவு செய்ய உதவாத களிமண், களர் மண் நிறைந்த வயல்கள் உள்ளன. இந்த மண்ணில், குண்டுமல்லி, அரளி உள்ளிட்ட பூச்செடிகள் நடவு செய்யும் பட்சத்தில், செடிகள் வளர்ச்சி இன்றி, பூ விளைச்சல் மிகவும் குறைந்து காணப்படும். அதனால், கடந்த காலங்களில், இந்தவகை மண்ணில், பூச்செடி நடவு செய்வதை, விவசாயிகள் தவிர்த்து வந்தனர். தற்போது, களிமண், களர் மண் ஆகியவைகளில், குண்டுமல்லி செடி நடவு செய்ய, விவசாயிகள் புது யுக்தியை கையாண்டு வருகின்றனர்.

குண்டுமல்லி செடி வேர், ஒரு அடி ஆழம் வரையிலும், பக்கவாட்டில் ஒரு அடி அலகத்திலும் பரவி வேரூன்றி வளரும் தன்மை கொண்டது. அதனால், களிமண், களர் மண் நிறைந்த வயலில், ஒரு அடி ஆழம், ஒரு அடி அகலத்துக்கு செம்மண் கொட்டி, அதில் குண்டுமல்லி செடி நடவு செய்யும் முறையை, விவசாயிகள் கடைபிடித்து வருகின்றனர்.

விவசாயிகள் சிலர் கூறியதாவது:

களிமண், களர் மண் நிலத்தில், குண்டுமல்லி செடி நடவு செய்தால், செடி வளர்ச்சியின்றி, போதிய பூ விளைச்சல் இல்லை. அதனால், வயலில் குண்டு மல்லி செடி நடவு செய்யும் இடத்தில் குழி பறித்து, செம்மண் கொட்டி வருகிறோம். செம்மண் கொட்டிய இடத்தில், செடி நடவு செய்தால், வேர்கள் நன்றாக மண்ணில் ஊன்றி வளரும். அதனால், செடி வேகமாக வளர்ந்து, பூக்கள் உற்பத்தி அதிகம் இருக்கும்.

செடி நடவு செய்த பிறகும், இடைவெளி விட்டு, குண்டுமல்லி செடிக்கு, செடி செம்மண் கொட்டி, களை பறித்து விடுவோம். ஒரு டிராக்டர் செம்மண், 1,200 ரூபாய்க்கு விலைக்கு வாங்கி, செடி நடவு செய்யும் இடத்தில் கொட்டி வருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## காதலர் தினத்தில் 40 லட்சம் மலர்களே ஏற்றுமதியாக வாய்ப்பு:செலவு அதிகரிப்பால் விவசாயிகள் கவலை



ஓசூர்: ஓசூர் தாலுகாவில் கடும் வறட்சி, குறைந்த அழுத்த மின்சாரம் மற்றும் சாகுபடி செலவு உயர்வால், நடப்பாண்டு காதலர் தினத்திற்கு அதிகப்பட்சம், 40 லட்சம் மலர்கள் மட்டுமே ஏற்றுமதியாகும் என, மதிப்பிடப்பட்டுஉள்ளது.

கிருஷ்ணகிரி:இதனால், ஆசியாவிலே மிகப்பெரிய, "டான்ப்ளோரா' ரோஜா மலர் பண்ணையை கொண்ட ஓசூர் நகரம், படிப்படியாக ரோஜா சாகுபடியில் தன்னிறைவை இழந்து வருவதாக, விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் ரோஜா மலர் சாகுபடிக்கு ஏற்ற, மிதமான குளிர்ந்த சூழலும், நல்ல மண் வளமும் காணப்படுகிறது.

இதை பயன்படுத்தி, கடந்த காலத்தில் விவசாயிகள், 5,000 ஏக்கரில் திறந்த வெளி மற்றும் பசுமை கிடங்கு (கிரீன் ஹவுஸ்) சாகுபடியில், ரோஜா மலர்களை ஆண்டு முழுவதும் உற்பத்தி செய்தனர். ஓசூரை அடுத்த அமுதகொண்டப்பள்ளியில், டிட்கோ உதவியுடன், 370 ஏக்கரில் ஆசியாவிலேயே மிக பெரிய, "டான்ப்ளோரா' ரோஜா மலர் பண்ணை செயல்படுகிறது.

மலேசியா:இங்கு ஆரம்ப காலத்தில் ஆண்டு முழுவதும் ஐரோப்பா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் அரபு நாடுகளுக்கு ரோஜா மலர்கள் ஏற்றுமதியாயின. குறிப்பாக காதலர் தினத்தையொட்டி, "டான்ப்ளோரா'வில் இருந்து மட்டும், 6 கோடி ரோஜா மலர்கள் ஏற்றுமதியாகி வந்தன.

இந்நிலையில், தற்போது நிலவும் வறட்சி, மின்சார தட்டுப்பாடு போன்றவற்றால், "டான்ப்ளோரா'வில் வெறும், 40 ஏக்கருக்கும் குறைவாகவே, ரோஜா சாகுபடி நடக்கிறது.

இதனால், நடப்பாண்டு, காதலர் தினத்தையொட்டி, "டான்ப்ளோரா'வில் அதிகப்பட்சம், 20 லட்சம் மலர்கள் மட்டுமே ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.இதர, 50க்கும் மேற்பட்ட தனியார் மலர் பண்ணைகளில், வங்கி கடன் மறுப்பு, வறட்சி, மின்சாரம் தட்டுப்பாடு, குறைஅழுத்த மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், விவசாயிகள், மலர் சாகுபடி பரப்பை குறைத்துள்ளனர்.

பலர், வங்கி கடன் செலுத்த முடியாமல் பசுமை கிடங்குகளை கழற்றி விற்பனை செய்து விட்டனர். இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், மாவட்ட நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும், ஓசூர் பகுதியில் ரோஜா சாகுபடியை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.இதனால், விவசாயிகள் வெளிநாட்டு ஏற்றுமதியில் ஆர்வம் காட்டாமல் உள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் காதலர் தினத்திற்காக தாஜ்மகால், கிராண்ட் கால், பர்ஸ்ட் ரெட், எல்லோ உள்ளிட்ட, 40 ரக ரோஜா மலர்களை விவசாயிகள் பிரத்யேகமாக உற்பத்தி செய்வர்.

இவ்வாண்டு, "டான்ப்ளோரா' மற்றும் தனியார் மலர் பண்ணைகளையும் சேர்த்து அதிகப்பட்சம், 40 லட்சம் ரோஜா மலர்கள் மட்டுமே காதலர் தின கொண்டாட்டத்துக்கு ஏற்றுமதியாகும் என, எதிர்பார்க்கப்படுகிறது. ரோஜா உற்பத்தியில், ஓசூர், படிப்படியாக தன்னிறைவை இழந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

வியாபாரிகள் ஆதிக்கம்:ஓசூர், பேரிகையை சேர்ந்த விவசாயி சர்வேஷ் ரெட்டி கூறியதாவது:ரோஜா மலர்களை, விவசாயிகள் நேரடியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தேவையான வர்த்தக வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி தரவில்லை.ஓசூர் பகுதியில் உற்பத்தியாகும், 75 சதவீத மலர்களை பெங்களூரு வியாபாரிகள் வாங்கி, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து லாபம் சம்பாதிக்கின்றனர்.வங்கியில் கடன் வாங்கி, கஷ்டப்பட்டு மலர்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வெளிநாட்டு ஏற்றுமதியால் எந்த லாபமும் இல்லை.

குளிர்பதன கிடங்குகள்:மின்சார தட்டுப்பாட்டால், குளிர்பதன கிடங்குகளில் பூக்களை பதப்படுத்தி வைக்க முடியாததால், வியாபாரிகள் கேட்கும் அடிமாட்டு விலைக்கு பூக்களை விற்க வேண்டிய அவலம் ஏற்பட்டுஉள்ளது.விவசாயிகள், நேரடியாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடியாததால் பெங்களூரு, கோவை, சென்னை மலர் வியாபாரிகள் நிர்ணயிக்கும் விலைக்கு, ரோஜா மலர்களை கொடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பருவ மழை ஏமாற்றினாலும் பருத்தி விளைச்சல் அமோகம்:புத்துயிர் பெற்றது ஜவுளி துறை



தேனி:நாடு முழுவதும் பருவ மழை ஏமாற்றினாலும், ஒன்பது மாநிலங்களில், 3.34 கோடி பொதிகள் அளவிற்கு பருத்தி விளைந்துள்ளது. இதனால், ஜவுளித் துறை மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.நாடு முழுவதும், 2012ம் ஆண்டில், வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவ மழை பொய்த்து விட்டது. ஓராண்டில் சராசரியாக, 45 சதவீத அளவிற்கே மழை பெய்துள்ளது. குஜராத்:இந்தியா முழுவதும், மழை குறைந்ததால், பல்வேறு வகையான பயிர்களின் சாகுபடி பாதிக்கப்பட்டது. ஆனால், பருத்தி விளைச்சல் மட்டும் பாதிக்கப்படவில்லை; மாறாக, பருத்தி விளைச்சல் அமோகமாக உள்ளது.பருத்தி அறுவடை, கடந்த நவம்பர் மாதம் தொடங்கி, தொடர்ந்து நடந்து வருகிறது. குஜராத்தில், 86 லட்சம் பொதிகள் (ஒரு பொதி - 170 கிலோ), பஞ்சாபில் 18 லட்சம், ராஜஸ்தானில் 16 லட்சம், ஒடிசாவில் 3 லட்சம், ஆந்திராவில் 72 லட்சம், அரியானாவில் 24 லட்சம், கர்நாடகாவில் 12 லட்சம், தமிழகத்தில் 5 லட்சம், மகாராஷ்டிராவில் 80 லட்சம், மத்திய பிரதேசத்தில் 17 லட்சம் பொதிகள் அளவிற்கு பருத்தி விளைந்துள்ளது. ஏற்றுமதி:மற்ற மாநிலங்களிலும் குறிப்பிடத்தக்க அளவில் பருத்தி விளைந்து உள்ளது. இதையடுத்து, நடப்பு ஆண்டில் பருத்தி உற்பத்தி, 3.34 கோடி பொதிகளாக இருக்கும்.இதில், உள்நாட்டு தேவைக்கு, 2.30 கோடி பொதிகள் பயன்படுத்தப்படும். 70 லட்சம் பருத்தி பொதிகளை ஏற்றுமதி செய்ய, மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது.

மீதம் உள்ள, 35 லட்சம் பருத்தி பொதிகளை இருப்பு வைக்க, இந்திய பருத்தி கழகம் முடிவு செய்துள்ளது.பருத்தி விலை விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் ஏற்ற வகையில் உள்ளது. ஒரு குவிண்டால் பருத்தி,(100 கிலோ) 3,900 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு கேண்டி (356 கிலோ) பருத்தி, 34, 500 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. நூற்பாலைகளுக்கும் இந்த விலை ஏற்றதாக உள்ளது.

நூற்பாலைகள், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கேண்டி பருத்தியை 60 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்தன. அதே சமயம், உலக அளவில் நூலிழை விலை வீழ்ச்சியடைந்தது. அமெரிக்கா:இதனால் நூற்பாலைகள் நஷ்டம டைந்தன. தற்போது ஒரு கேண்டி பருத்தி, 34,500 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. உலக அளவில் நூலிழை விலை

அதிகரித்துள்ளது.சீனா, தாய்லாந்து, அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள், இந்தியாவில் இருந்து நூலிழை மற்றும் ஜவுளி வகைகளை இறக்குமதி செய்து வருகின்றன.


தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

21.01.2013 A.M


## மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நீர்வரத் து விநாடிக்கு ஆயிரம் கனஅடியை தாண்டி உள்ளது. விவசாயிகள் மகிழ்ச் சியடைந்துள்ளனர். நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக 500 கனஅடிக்கும் குறைவாகவே நீர் வந்து கொண்டிருந்தது. இந்நிலையில், வினாடிக்கு 448 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை வினாடிக்கு 1,050 கனஅடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் 34 அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 700 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 9.23 டி.எம்.சி.

## தடுப்பணைகள் கட்ட ரூ.98.67 கோடி ஒதுக்கீடு



சென்னை : தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் ரூ.98 கோடியே 67 லட்சத்து 60 ஆயிரம் செலவில் தடுப்பணைகள் மற்றும் ஏரி மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சென்னை நகரின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய ஆந்திராவிலிருந்து வரும் கிருஷ்ணா நதி நீரை சேமிக்க, திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், திருக்கண்டலம் அருகே கொசஸ்தலையாற்றின் குறுக்கே, ரூ.35 கோடி செலவில் தடுப்பணை கட்டப்படும்.

வட சென்னை, எண்ணூர் அதிவிரைவு சாலை அருகே சின்னக்குப்பத்தில் பழுதடைந்துள்ள கடலரிப்பு தடுப்புச் சுவர்கள் ரூ.25 லட்சத்து 60 ஆயிரம் செலவில் சீரமைக்கப்படும்.
சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்தில் வைகை ஆற்றிலிருந்து மாரநாடு ஏரி மற்றும் 9 ஏரிகளுக்கு நீர் வழங்க, ரூ.12 கோடியே 85 லட்சம் செலவில் லாடனேந்தல் கிராமத்தில் ஒரு படுகை அணை கட்டுதல், மானாமதுரை வட்டத்தில் வைகை ஆற்றிலிருந்து பார்த்திபனூர் பெரிய மற்றும் சிறிய ஏரி, வன்னிக்குடி ஏரி மற்றும் இரண்டு ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்காக ஆத்தூர் கிராமத்தில் ரூ.16 கோடி செலவில் படுகை அணை கட்டப்படும்.

### தேயிலை தூள் விலை சரிவு



குன்னூர் : குன்னூர் சி.டி.டி.ஏ.ஏலமையத்தில் 3வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளி நாட்களில் நடந்தது. மொத்தம் 16லட்சத்து 97ஆயிரத்து 905 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இந்த ஏலத்தில் பாகிஸ்தான் வர்த்தகர்கள் பங்கேற்கவில்லை. உள்நாட்டு வர்த்தகர்கள் பங்கேற்று தரமான தேயிலை தூளை கொள்முதல் செய்தனர். அனைத்து ரகத்துக்கும் கிலோ ரூ.3 வரை விலை சரிந்தது.

ஏலத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.88 முதல் ரூ.93 வரையிலும், உயர்வகை ரூ.120 முதல் ரூ.130 வரையிலும், டஸ்ட ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.86 முதல் ரூ.90 வரையிலும், உயர்வகை ரூ.150 முதல் ரூ.160 வரையிலும் விலை கிடைத்தது.

## கம்போடியாவில் விளைந்த மஞ்சள் இந்தியாவுக்கு மீண்டும் வருகிறது



ஈரோடு: கோபியில் இருந்து விதை மஞ்சளை பெற்று சென்ற கம்போடியா விவசாயிகள், அவற்றில் விளைந்த மஞ்சளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். தமிழகத்தில் ஈரோடு, சேலம் மஞ்சளுக்கு சர்வதேச அளவில் கிராக்கி உள்ளது. கடந்த ஆண்டில் விலை சரிந்ததால் சாகுபடி பரப்பும் பாதியாக குறைந்தது. இந்நிலையில், கடந்த ஓராண்டுக்கு முன்பு கம்போடியா நாட்டை சேர்ந்த விவசாயிகள் ஒரு குழுவாக ஈரோடு மாவட்டம், கோபிக்கு வந்தனர். அப்போது 200 டன் விதை மஞ்சளை வாங்கி சென்றனர். இந்த விதை மஞ்சளை அந்நாட்டில் பயிர் செய்து விளைந்த மஞ்சளை தற்போது இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய தொடங்கியுள்ளனர் இது குறித்து அனைத்து வணிகர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் சிவநேசன் கூறியதாவது:

கம்போடியா, தான்சான்யா உள்ளிட்ட நாடுகளில் இருந்து மஞ்சள் ஆன்லைன் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அந்த நாடுகளில் மஞ்சள் சாகுபடி செலவு மிகவும் குறைவு. ஒரு குவிண்டால் அடக்க செலவு ரூ.3500தான் ஆகிறது. ஆனால், தமிழகத்தில் ஒரு குவிண்டால்

உற்பத்தி செய்ய ரூ.7000 ஆகிறது. தற்போது, மார்க்கெட்டுகளில் குவிண்டால் ரூ.6 ஆயிரத்திற்கு விற்கப்படுகிறது. கம்போடிய விவசாயிகளுக்கு குவிண்டாலுக்கு ரூ.2500 வரை லாபம் கிடைக்கிறது. ஆனால், நம்முடைய விவசாயிகளுக்கு அடக்க செலவு கூட கட்டுபடியாகாத நிலை உள்ளது. இதனால்தான் ஆன்லைன் வர்த்தகத்தை தடை செய்ய கோருகிறோம்.இவ்வாறு சிவநேசன் கூறினார்.

விலை குறையாது

ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் சங்கத்தின் இணை செயலாளர் தியாகராஜன் கூறியதாவது: கம்போடியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து மஞ்சள் இறக்குமதி செய்யப்படுவது, உள்ளூர் மஞ்சளின் விலையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. ஏனெனில், ஈரோடு, சேலம் மஞ்சளின் தரம் உலக அளவில் வேறு எங்கும் இருக்காது. இங்குள்ள விதை மஞ்சளின் மூலம் வெளிநாடுகளில் விளைவித்தாலும் மண்ணின் தன்மை இது போல இருக்காது என்பதால் தரம் மாறுபடும். கடந்த ஆண்டை விட மஞ்சள் சாகுபடி வெகுவாக குறைந்துள்ளது. எனவே, விலை குறைய வாய்ப்பில்லை. இவ்வாறு தியாகராஜன் கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

21.01.2013 A.M

## திருச்சி மாவட்டத்தில் தண்ணீர் இன்றி 2 லட்சம் ஏக்கரில் கருகும் விவசாய பயிர்கள் அபாயம்

திருச்சி

2 லட்சம் ஏக்கரில் கருகும் பயிர்களை காப்பாற்ற எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தைப்போல் பவானி, அமராவதி அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படுமா?

உய்யகொண்டான் வாய்க்கால் உள்பட 17 பாசன வாய்க்கால்கள் மூலம் 2 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டு தற்போது கருகும் நிலையில் உள்ள பயிர்களை காப்பாற்ற எம்.ஜி.ஆர் ஆட்சி காலத்தைப்போல் பவானி, அமராவதி அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்து உள்ளனர்.

### 17 பாசன வாய்க்கால்கள்

கர்நாடகத்தின் குடகு மாவட்டத்தில் உற்பத்தியாகி ஒகேனக்கல் வழியாக தமிழகத்தில் கால் ஊன்றி மேட்டூர் அணையில் சேமிக்கப்பட்டு அதன் பின்னர் திருச்சி, தஞ்சை உள்பட 11 மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரமாக ஆண்டாண்டு காலமாக விளங்கி வந்த காவிரி நீர் இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததாலும், கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விட மறுத்ததாலும் விவசாயிகளின் வாழ்வில் மிகப்பெரிய சோகத்தை ஏற்படுத்தி விட்டது.

குறுவை சாகுபடியை இழந்த விவசாயிகள் சம்பா சாகுபடியின் மூலமாவது ஓரளவு சமாளிக்கலாம் என நினைத்து சாகுபடி செய்தனர். ஆனால் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படாததால் டெல்டா பாசன விவசாயிகளின் கனவுகள் எல்லாம் பொய்த்து போனது.

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு முற்றிலுமாக தண்ணீர் திறந்து விடப்படாததால் இந்த ஆண்டு சுமார் 12 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த சம்பா பயிர்கள் கருகி அழிந்து போய்விட்டன.

இது ஒரு புறம் இருக்க காவிரியின் ஜேடார்பாளையம் அணையில் இருந்து பிரியும் 17 வாய்க்கால்கள் மூலம் திருச்சி, சேலம், நாமக்கல், கரூர், தஞ்சை உள்பட சில மாவட்டங்களில் சுமார் 2 லட்சம் ஏக்கரில் ஆண்டாண்டு காலமாக பாசன வசதி பெறப்பட்டு வந்தது. மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 3 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்படும் தண்ணீரின் மூலமாக இந்த 17 வாய்க்கால்களிலும் பாசனம் செய்யப்பட்டு வருகிறது.

2 லட்சம் ஏக்கர் பயிர்

உய்யக்கொண்டான், கட்டளை உள்ளிட்ட 17 பாசன வாய்க்கால்களை நம்பி காவிரி கரையோர மாவட்டங்களில் மேட்டூர் அணையில் இருந்து கல்லணை வரை சுமார் 2 லட்சம் ஏக்கரில் வாழை, கரும்பு, வெற்றிலை போன்ற பண பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டது.

மேட்டூரில் இருந்து திருச்சி வரை காவிரியில் சுமார் 40 இடங்களில் கூட்டு குடிநீர்திட்டங்களுக்காக ராட்சத போர்வெல்கள் மூலம் தண்ணீர் உறிஞ்சப்படுவதால் காவிரி ஆற்றில் இருந்து சுமார் 30 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு நீர் ஆதாரம் குறைந்து விட்டது.

கருகின

இதன்காரணமாகவும், மேட்டூர் அணையில் இருந்து தற்போது 700 கன அடி மட்டுமே தண்ணீர் திறந்து விடுவதாலும் இந்த சுற்றுப்புற பகுதிகளில் 17 வாய்க்கால்களை நம்பி சாகுபடி செய்யப்பட்டு இருந்த நெல், வாழை, கரும்பு உள்பட பயிர்கள் காய்ந்து கருகி வருகின்றன.

மேட்டூர் அணையில் தற்போது தண்ணீர் மிகவும் குறைவாக இருப்பதால் மேலும் 4 மாதங்களுக்கு குடிநீர் தேவைக்காக மட்டுமே விடுவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் 17 வாய்க்கால்களை நம்பி 2 லட்சம் ஏக்கரிலும் பயிரிடப்பட்ட பயிர்கள் கருகி சுமார் 20 ஆயிரம் கோடி இழப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது.

மேட்டூர் இருப்பு குறைவு

காவிரி வறண்டாலும் 17 வாய்க்கால்கள் மூலம் பாசன வசதி பெற்று வந்த விவசாயிகள் இந்த ஆண்டு கடும் சோதனையை சந்தித்து கொண்டு இருக்கிறார்கள். நாளுக்கு நாள் கருகிக்கொண்டு இருக்கும் 2 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை காப்பாற்ற மேட்டூர் அணையில் இருந்து உடனடியாக கூடுதலாக தண்ணீர் திறந்து விட்டாக வேண்டும்.

ஆனால் மேட்டூர் அணையில் தற்போது தண்ணீர் திறந்து விட முடியாத அளவிற்கு நீர் இருப்பு மிகவும் குறைவாக இருப்பதால் அமராவதி, பவானி அணைகளில் இருந்து 17 வாய்க்கால்களில்

தண்ணீர் திறந்து விட்டாவது கருகும் பயிர்களை காப்பாற்ற போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்து உள்ளனர்.

எம்.ஜி.ஆர். காலத்தைப்போல்…

இது தொடர்பாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் விவசாய பிரிவு மாநில துணைத்தலைவர் புலியூர் நாகராஜன் முதல் –அமைச்சர் ஜெயலலிதாவுக்கு அனுப்பி உள்ள ஒரு கோரிக்கை மனுவில் "கடந்த காலங்களில் இதே போல் மேட்டூர் அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறந்து விடமுடியாத நிலைமை ஏற்பட்டபோது எம்.ஜி.ஆர் ஆட்சி காலத்திலும், உங்களது கடந்த ஆட்சியின் போதும் பவானி, அமராவதி அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு வாடிய பயிர்கள் காப்பாற்றப்பட்டு இருக்கிறது. அதேபோல் இப்போதும் பவானி, அமராவதி அணைகளில் இருந்த 17 வாய்க்கால் பாசனத்திற்கும் தண்ணீர் திறந்து விட உத்தரவிடவேண்டும்" என கூறி உள்ளார்.

## நடப்பு ஆண்டில் பொட்டாஷ் உர விலை 20% குறைய வாய்ப்பு

தேவைப்பாடு குறைந்து வரும் நிலையில், கையிருப்பு அதிகரித்துள்ளதால் இவ்வாண்டில் சர்வதேச அளவில் பொட்டாஷ் உர விலை 20 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

கடந்த 2012–ஆம் ஆண்டில் பொட்டாஷ் உர விற்பனை அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 16 சதவீதம் குறைந்து 4.90 கோடி டன்னாக குறைந்தது என ஆய்வு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த 2012 நவம்பர் நிலவரப்படி பொட்டாஷ் உர கையிருப்பு, அதற்கு முந்தைய ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் சுமார் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. இதுபோன்ற காரணங்களால் உலக அளவில் பொட்டாஷ் உர விலை குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்தியா தனது பொட்டாஷ் உர தேவைப்பாடு முழுவதையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதால் இந்திய விவசாயிகளுக்கு இது சாதகமான அம்சமாகும்.